01 OCT 2014
032932


**சுருக்கம்**

"அம்மா மக்கள் சேவை மையம்" – மாநகராட்சிகளில் உள்ள மண்டல அலுவலகங்களிலும், நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், பிறப்பு இறப்பு சான்றிதழ், வர்த்தக உரிமம் உள்ளிட்ட அனைத்து விண்ணப்பங்களின் மீதும் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள ஒவ்வொரு வாரமும் புதன் கிழமையன்று மக்களுக்கு அதிக சேவையை வழங்குவதற்கு பின்பற்றத் தக்க வழிமுறைகள் –வெளியிடப்படுகிறது.


---

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.IV) துறை

அரசாணை (நிலை) எண்.119

நாள் : **26.09.2014.**
**(திருவள்ளுவர் ஆண்டு 2045,**
**ஜய, புரட்டாசி – 10 )**

**படிக்க :**

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.20572/ 2014/தி1, நாள் 09.9.2014.

*******

**ஆணை:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்றப் பேரவையில் விதி எண்.110–ன் கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள் :-

"மாநகராட்சிகளில் உள்ள மண்டல அலுவலகங்களிலும், நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், பிறப்பு இறப்பு சான்றிதழ், வர்த்தக உரிமம், பாதாள சாக்கடை குழாய் இணைப்பு, குடிநீர் குழாய் இணைப்பு, தொழில் வரி விதிப்பு, சொத்து வரி கேட்பு, கட்டட அனுமதி, பெயர் மாற்றம், காலிமனை வரி விதிப்பு, வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு சான்றிதழ் ஆகியவை கோரும் விண்ணப்பங்களின் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கும் வகையில் **"அம்மா மக்கள் சேவை மையம்"** நடத்தப்படும். இந்த மையத்தில் ஒவ்வொரு புதன்கிழமையிலும் அலுவலர்கள் பொது மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று ஆய்வு செய்து மக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையரைக்கு ஏற்ப ஆணை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இப்பணிகளை அந்தந்த துறைத் தலைவர்கள் வலைதளம் மூலம் கண்காணிக்கும் வசதி ஏற்படுத்தப்படும்."

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்துவதற்காக, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பின்வரும் வழிமுறைகளை அரசுக்கு அனுப்பி, இத்திட்டத்தினை செம்மையாக செயல்படுத்த அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்களுக்கு அறிவுறுத்த ஏதுவாக, உரிய ஆணை வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கோரியுள்ளார். நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையினை ஏற்று அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(த. பி. பா.,)

- **<u>"அம்மா மக்கள் சேவை மையம்"</u>** திட்டத்தின் மூலம் பிறப்பு இறப்பு சான்றிதழ், வர்த்தக உரிமம், பாதாள சாக்கடை குழாய் இணைப்பு, குடிநீர் குழாய் இணைப்பு, தொழில் வரி விதிப்பு, சொத்து வரி கேட்பு, கட்டட அனுமதி, பெயர் மாற்றம், காலிமனை வரி விதிப்பு, வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கு சான்றிதழ் உள்ளிட்ட **மக்கள் சாசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து சேவைகளின்** கீழ் பொது மக்கள் கோரும் விண்ணப்பங்களின் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- **<u>"அம்மா மக்கள் சேவை மையம்"</u>** திட்டத்தினை மாநகராட்சிகள் / நகராட்சிகள் / பேரூராட்சிகளில் செயல்படுத்தும் வகையில் ஒவ்வொரு வாரத்தின் **<u>புதன்கிழமை அன்று</u>** பொது மக்களுடைய மனுக்களைப் பெற்று, கோரிக்கைகளை முழுமையாக அறிந்து, ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுத்து ஆணைகள் வழங்க சம்மந்தப்பட்ட அலுவலர்களால் நடவடிக்கை எடுக்கப்படும்.
- **<u>இத்திட்டம்,</u>** <u>சென்னை மாநகராட்சியைப்</u> பொறுத்தவரையில், சம்மந்தப்பட்ட மண்டல மாநகராட்சி ஆணையரோ அல்லது அவரால் நியமிக்கப்படும் அலுவலரோ, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீரகற்று பணிகளை செயல்படுத்தும் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய அலுவலர்களுடன் தத்தம் மண்டல அலுவலகங்களிலும், சென்னை நீங்கலான பிற மாநராட்சிகளைப் பொறுத்த வரையில் மாநகராட்சி உதவி ஆணையர்கள் தத்தம் மண்டல அலுவலகங்களிலும், நகராட்சி மற்றும் பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில், சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர் மற்றும் பேரூராட்சிகளில் செயல் அலுவலர்கள் தங்களின் பிரிவு அலுவலர்களுடன் தங்கள் அலுவலகங்களிலும் ஒவ்வொரு புதன்கிழமை அன்றும் பொது மக்களுடைய குறைகளைக் கேட்டறிந்து மனுக்களைப் பெற்று, ஆய்வு செய்து மக்கள் சாசனத்தில் கூறப்பட்ட கால வரையறைக்குள், ஒவ்வொரு கோரிக்கை மனுவிற்கும் முறையான பதில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- இது பொதுமக்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் உட்பட அனைத்து தரப்பினரும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தித் தங்களது கோரிக்கையை விண்ணப்ப வடிவில் சமர்ப்பிக்க உதவியாக இருக்கும்.
- "அம்மா மக்கள் சேவை மையம்" திட்டம் மூலம், மாநகராட்சிகள் / நகராட்சிகள் / பேரூராட்சிகளில் பெறப்படும் விண்ணப்பங்களைக் கணினியில் பதிவு செய்து, அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் பின்வரும் அலுவலர்களுக்கு ஆய்வு அறிக்கையாக அனுப்பப்பட வேண்டும்.
  - மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில், சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர்கள் மாநகராட்சி ஆணையருக்கும்,
  - நகராட்சிகளைப் பொறுத்த வரையில், மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும்,
  - பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில் உதவி பேரூராட்சிகளின் இயக்குநர்களுக்கும் அனுப்பப்பட வேண்டும்.
  - மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் மாவட்டங்களில் மாதந்தோறும் நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில் இதனை ஒரு பொருளாகக் கொண்டு, மாநகராட்சிகள் / நகராட்சிகள் / பேரூராட்சிகளை ஆய்வு செய்து கண்காணிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- இத்திட்டத்தில், பொது மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை விண்ணப்பங்கள் மீது மக்கள் சாசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கால வரையரைக்குள் நிறைவேற்றப்படாமல் நிலுவையில் இருக்கும் மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட மாநகராட்சி ஆணையர் / மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் / பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் 30 நாட்களுக்கு

ஒரு முறை ஆய்வு செய்து, குறைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

- <u>**"அம்மா மக்கள் சேவை மையம்"**</u> திட்டத்தினை **மாநில அளவில் கண்காணிக்கும் வகையில்**, சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கும் சேர்த்து ஒருங்கிணைப்பு அலுவலராக செயல்படுவார்.
- சென்னை நீங்கலான பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளைப் பொறுத்தவரையில், நகராட்சி நிர்வாக இணை ஆணையர் அவர்களும், பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களும், மாநில அளவில் ஒருங்கிணைப்பு அலுவலர்களாக செயல்படுவர்.
- <u>**"அம்மா மக்கள் சேவை மையம்"**</u> திட்டத்தின் முன்னேற்றத்தினை **கணினியில் கண்காணிக்கும் வகையில்**, தற்போது சென்னை மாநகராட்சியில் பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கை விவரங்கள் நடைமுறையிலுள்ள கணினி மூலம் கண்காணிக்கும் முறை முழுமையாக உள்ளதன் காரணமாக, அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் சேர்த்து பொதுவான ஒரு கணினி மென்பொருளை தயாரிக்க சென்னை மாநகராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.
- அம்மா மக்கள் சேவை மையம் திட்டத் தொடர்பான பணிகள் பின்வருமாறு அமையும் :-

<u>(1) குடிநீர் விநியோகம் :</u>

| வ.எண். (1) | சேவை / குறைபாடு (2) |
|---|---|
| 1. | புதிய குடிநீர் இணைப்பு வழங்குதல் |
| 2. | பழுதான நீர் அளவைமானி மாற்றுதல் |
| 3. | குடிநீர் மாசு மற்றும் அசுத்தம் சம்பந்தமான புகார் |
| 4. | முக்கிய குழாய்களில் நீர் கசிவு சம்பந்தமான புகார் |
| 5. | சுத்தமாக நீர் வரவில்லை அல்லது குடிநீர் வழங்குதலில் பழுது போன்றவற்றைச் சரிசெய்தல் |
| 6. | இந்தியா மார்க்–2 பம்பு மற்றும் குழாய் கிணறு பம்புகள் பழுது பார்த்தல் |
| 7. | குடிநீரில் குளோரின் குறைபாடு குறித்து |
| **குடிநீர் வழங்கலுக்கான வேண்டுகோள் :** | |
| 8. | லாரி (டேங்கர்) மூலம் குடிநீர் வழங்குதல் |
| 9. | திருமணம் மற்றும் விழாக்களுக்கு லாரி மூலம் குடிநீர் வழங்குதல். |

<u>(2) பாதாள சாக்கடை திட்டம் :</u>

| வ.எண். (1) | சேவை / குறைபாடு (2) |
|---|---|
| 1. | பாதாள சாக்கடை இணைப்பு வழங்குதல் |
| 2. | முக்கிய கழிவு நீர்க் குழாயில் அடைப்பு |
| 3. | வீட்டில் கழிவு நீர் தடை |

(த. பி. பா.,)

| | |
|---|---|
| 4. | கழிவுநீர் வழிந்தோடுதல் |
| 5. | பழுதான கழிவுநீர் குழாய்களை சரிசெய்தல் அல்லது மாற்றுதல் |
| 6. | வீட்டு கழிவுநீர் தொட்டியிலுள்ள கழிவு நீரை அப்புறப்படுத்துதல். |

**( 3 ) சுத்தம் மற்றும் சுகாதாரம் :**

| வ.எண். (1) | சேவை / குறைபாடு (2) |
|---|---|
| 1. | குப்பை / இறந்த விலங்குகளை அகற்றுதல் / சாலைகளை சுத்தம் செய்தல் குறித்த புகார்கள் |
| 2. | கட்டுமான பொருட்களை அகற்றுதல் |
| 3. | பொது கழிப்பிடங்களில் அடைப்புகள் குறித்த புகார் |

**(4) அபாயகரமானதும் மற்றும் அருவருக்கத்தக்க வணிகங்களுக்கான உரிமங்கள் வழங்க :**

| வ.எண். (1) | சேவை / குறைபாடு (2) |
|---|---|
| 1. | உரிமம் அளிக்க அல்லது நிராகரிக்க |
| 2. | உரிமம் புதுப்பிக்க |

**( 5 ) சொத்து வரி :**

| வ.எண். (1) | சேவை / குறைபாடு (2) |
|---|---|
| 1. | பெயர் மாற்றம் குறித்த விண்ணப்பங்கள் / புகார்கள் |
| 2. | புதிய கட்டடங்களுக்கான வரி விதிப்பு |

**( 6 ) பிறப்பு / இறப்பு சான்றிதழ் வழங்குதல் :**

| வ.எண். (1) | சேவை / குறைபாடு (2) |
|---|---|
| 1. | பிறப்பு அல்லது இறப்பு பதிவு செய்தல் |
| 2. | பிறப்பு அல்லது இறப்பு சான்றிதழ் வழங்குதல் |

**( 7 ) நகரமைப்புப் பிரிவு :**

| வ.எண். (1) | சேவை / குறைபாடு (2) |
|---|---|
| 1. | கட்டட வரைப்படங்கள் விண்ணப்பங்களை அங்கீகரிக்க அல்லது நிராகரிக்க |
| 2. | கட்டட உரிமம் வழங்கல் |
| 3. | புதிய மனை பிரிவுகளை அங்கீகரித்தல் |
| 4. | ஆக்ரமிப்புகளை அகற்றுதல் |

**( 8 ) வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்தல் :-**

| வ.எண். (1) | சேவை / குறைபாடு (2) |
|---|---|
| 1. | தனிநபர் கடன் வழங்குதல் |
| 2. | குழு கடன் வழங்குதல் |
| 3. | தொழில் பயிற்சி வழங்குதல் |
| 4. | சிக்கன நாணய சங்க அமைப்பிற்கு சுழல் நிதி வழங்குதல் |
| 5. | கூலி வேலை வாய்ப்புத் திட்டம் |

3. "அம்மா மக்கள் சேவை மையம்" திட்டத்தினை, மேலே பத்தி 2 –ல் கண்டுள்ள வழிமுறைகளின்படி பிரதி வாரம் ஒவ்வொரு புதன் கிழமையும் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தவும் அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க.பணீந்திர ரெட்டி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை– 600 005.

முதன்மைச் செயலாளர் / ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003.

பேரூராட்சிகளின் இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 108.

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

நகல்:

மாண்புமிகு அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
நகராட்சி நிர்வாகம், ஊரகவளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை, சென்னை– 600 009.

முதன்மைச் செயலரின் முதன்மை தனிச்செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.1, வரவு–செலவு, மற்றும் பொது) துறை, சென்னை – 600 009.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

26/9/14

பிரிவு அலுவலர்.

24/9/14

JDC

CBU

<u>சுருக்கம்</u>

அம்மா உணவகங்கள் – தமிழகத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 360 இடங்களில் அம்மா உணவகங்கள் திறப்பதற்கு அனுமதி – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.2) துறை**

அரசாணை (நிலை) எண். 118

நாள்: 26.09.2014
திருவள்ளுவர் ஆண்டு 2045
ஜய, புரட்டாசி மாதம் 10
படிக்கப்பட்டது:

1. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க. எண். 11521/2014/மாநஅ.3, நாள் 12.06.2014 மற்றும் 17.07.2014.
2. சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். B2/3966/2014, நாள் 21.07.2014.

******

<u>ஆணை:</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 01.06.2014 அன்று வெளியிட்ட அறிவிப்பில், தமிழகத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 360 இடங்களில் அம்மா உணவகங்கள் திறப்பதற்கு உத்தரவிட்டுள்ளார்.

2. தமிழகத்திலுள்ள அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிப் பகுதிகளில் 160 அம்மா உணவகங்கள் மற்றும் சென்னை மாநகராட்சிப் பகுதியில் 200 அம்மா உணவகங்கள் அமைப்பதற்கான செயற்குறிப்புகளை மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் முறையே நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் அரசுக்கு அனுப்பி, இது குறித்து உரிய ஆணைகள் வெளியிடுமாறு அரசினை கோரியுள்ளனர்.

3. தமிழகத்திலுள்ள அனைத்து மாநகராட்சிகளில் நடைபெற்றுவரும் அம்மா உணவகங்கள் மற்றும் புதிதாக துவக்கப்படவுள்ள அம்மா உணவகங்கள் குறித்து சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்புகளை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, கீழ்க்கண்டவாறு அனுமதி அளித்து ஆணையிடுகிறது:-

I. ஒரு அம்மா உணவகம் அமைக்க தேவைப்படும் மூலதன செலவினத்தொகை ரூ.25.00 இலட்சம் என நிர்ணயம் செய்து, புதியதாக அமைக்கப்படவுள்ள 360 உணவகங்களுக்கு ரூ.90.00 கோடி மாநில நிதிக்குழு பகிர்வுத் தொகையின்

Received on 27.9.14
27/9/14

உட்கூறான உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியிலிருந்து (IGFF-2014-2015) ஒதுக்கீடு செய்யப்படுகிறது .

II. ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள அம்மா உணவகங்கள் மற்றும் தற்போது புதியதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அம்மா உணவகங்களுக்கு தேவைப்படும் அரிசி, கோதுமை, உளுந்தம் பருப்பு, துவரம் பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் போன்ற பொருட்களை பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விற்கப்படும் மான்ய விலையில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையால் வழங்கப்படும்.

III. இத்திட்டத்திற்கு தேவைப்படும் மளிகை பொருட்கள், காய்கறிகள், ஆவின் தயிர் மற்றும் சமையல் எரிவாயு போன்றவற்றை, அரசாணை (ப) எண்.21 நநி(ம)குவ (மாந.1) துறை, நாள் 17.01.2013 மற்றும் அரசாணை (நிலை) எண்.79 நநி(ம)குவ (மாந.2) துறை நாள் 31.05.2013–ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு கொள்முதல் செய்திட அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், இதற்கான செலவினங்களை மேற்படி அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டவாறு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்படலாம்.

IV. அம்மா உணவகங்கள் அமைக்க மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் போதிய இடம் இல்லாதபட்சத்தில், அரசு மற்றும் அரசு துறைகளுக்கு சொந்தமான இடங்களை நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது .

V. சென்னை மாநகராட்சியில் தேர்வு செய்யப்படும் 200 இடங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு சென்னை மாநகராட்சி ஆணையருக்கும், இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தேர்வு செய்யப்படும் 156 இடங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையருக்கும், 4 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பொது மருத்துவமனைகளில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநருக்கும் அனுமதி வழங்கப்படுகிறது .

4. அரசு பொது மருத்துவமனைகளில் செயல்படுத்தப்படும் அம்மா உணவகங்களைப் பொறுத்தவரை கீழ்க்கண்டவாறு அனுமதி வழங்கப்படுகிறது :-

I. சம்மந்தப்பட்ட மருத்துவமனை கட்டடத்திலேயே அம்மா உணவகங்களை நடத்துவதற்கு தேவையான இடத்தினை மருத்துவமனை நிர்வாகம் ஒதுக்கித் தர வேண்டும்.

II. அவ்வாறு போதுமான இடவசதி இல்லாத நிலையில், மருத்துவமனை வளாகத்திற்குள் பொருத்தமான இடத்தினை தேர்வு செய்து சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிடம் மருத்துவமனை நிர்வாகம் ஒதுக்கித் தர வேண்டும். அவ்வாறு தேர்வு செய்யப்படும் இடத்தில், உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியின் (IGFF) மூலதன பங்களிப்பின் மூலம் அம்மா உணவகத்தை கட்டுவதற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

III. அரசு பொது மருத்துவமனைகளில் அமைக்கப்படும் அம்மா உணவகங்களில் உணவு வகைகள் தயாரிப்பதற்கான செலவு அவற்றை விற்பதன் மூலம் கிடைக்கும் வருவாயை விடக் கூடுதலாக இருப்பின், அக்கூடுதல் செலவினத்தை, அரசு பொது மருத்துவமனைகளில் காப்பீடு மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு ஈடு செய்ய வேண்டும். அவ்வாறு காப்பீடு வருவாய் போதுமான அளவு இல்லையென்றால், நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவுக்கான நிதியில் (Dietary Provision) கூடுதல் ஒதுக்கீடு பெற்று, மேற்கண்ட கூடுதல் செலவினத்தை ஈடுசெய்ய வேண்டும்.

IV. அரசு பொதுமருத்துவமனைகள் நகர்ப்புரத்தில் அமைந்திருந்தால், அங்கு அமைக்கப்படும் அம்மா உணவகங்கள் மருத்துவமனை நிதியுதவியுடன் சம்மந்தப்பட்ட நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளால், நிர்வகிக்கப்பட வேண்டும்.

V. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920ன்படி சம்பந்தப்பட்ட நகராட்சியால் அதன் நிர்வாக எல்லைக்குள் மட்டுமே செலவினம் மேற்கொள்ள இயலும். சிவகங்கை, திருவாரூர், விழுப்புரம், தேனி ஆகிய மாவட்டங்களில் தலைமையிட அரசு பொது மருத்துவமனைகள், சம்பந்தப்பட்ட நகராட்சி நிர்வாக எல்லைக்கு வெளியே இதர உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைக்குள் அமைய பெற்றுள்ளதால், மேற்படி அரசு பொதுமருத்துவமனைகளில் அமைக்கப்படும் அம்மா உணவகங்கள் மருத்துவமனை நிதியுதவியுடன் மருத்துவமனை அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியத்தால் நிர்வகிக்கப்பட வேண்டும்.

5. அம்மா உணவகங்களை ஏற்படுத்த ஏற்கனவே உள்ள கட்டடங்களை பழுதுபார்க்கவும், காலியிடத்தில் புதிய கட்டடங்களை கட்டுவதற்கும், பாத்திரங்கள் மற்றும் இயந்திரங்களை வாங்குவதற்கும் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்படுகிறது.

6. மாநகராட்சிகள்/நகராட்சிகள் அம்மா உணவகங்களை தரத்துடன் நடத்திட, நிறுவனங்களின் சமூக பொறுப்பின் (Corporate Social Resonsibility) அடிப்படையில் நிறுவனங்களின் பங்களிப்பை பெற்றிட சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

7. மேலே பத்தி 3(I)-ல் ஆணையிடப்பட்டுள்ளவாறு, அம்மா உணவகங்கள் அமைக்க தேவைப்படும் மூலதன செலவினத்தொகையான ரூ.90.00 கோடியினை மாநில நிதிக்குழு பகிர்வுத் தொகையின் உட்கூறான உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதியிலிருந்து (IGFF-2014–2015) பெற்று, அதனை நிதி மேலாளர், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியத்தின் (TUFIDCO) கட்டுப்பாட்டிலுள்ள பொது வைப்பு கணக்கில் (P.D. Account) செலுத்திட நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.53562/நிதி(ந.நி(ம)கு.வ)/2014 நாள்: 25.09.2014-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.பணீந்திர ரெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை– 600 005
ஆணையர்,சென்னை மாநகராட்சி, சென்னை– 600 003
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, பனகல் மாளிகை, சென்னை – 600 015.
நிதி மேலாளர், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியம், சென்னை – 600 035.
சம்மந்தப்பட்ட அரசு பொது மருத்துவமனைகளின் தலைமை மருத்துவ அலுவலர் (DEAN).
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்பொருள் பாதுகாப்புத் துறை, சென்னை– 600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை – 600 009.
ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை – 600 009.
கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, சென்னை – 600 009
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 12, தம்புசாமி ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010.
ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை, மாதவரம், சென்னை – 600 051.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை – 600 108.
மாநில தலைமை கணக்காயர், சென்னை– 600 018/35.
அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் (நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)

**நகல்:–**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை– 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நநி, ஊ.வ, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்சிறைச்சாலைகள்) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை– 600 009
தலைமைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை– 600 009.
நிதித்துறை (ந.நி.(ம) கு.வ.) சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின் முதன்மைத் தனிச் செயலாளர், சென்னை– 600 009
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை– 600 009
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26/9/14
பிரிவு அலுவலர்.
26/09/14